[2004 ஜூலை 28

(ஈ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஐம்பத்து ஒன்பதாவது முதல் அறுபத்து எட்டாவது வரையிலான 10 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. அறிவிப்பு

இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2004 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.